3132




# காதலும் கருணையும்

புலவர்
ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|800|9'132 800
மா. க. சமுவேலோங்கள்

# காதலும் கருணையும்

## கவிதைத் தொகுதி

## புலவர் ம. பார்வதிநாதசிவம்

வெளியிடுபவர்:
பி. வேலாயுதபிள்ளை
கூடலகம்,
மயிலங்கூடல், இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு:
1972 மே

விலை ரூபாய் 2-00

அச்சுப் பதிவு:
இலங்கைநாயகி அச்சகம்
கல்வியங்காடு.

உரிமை ஆசிரியருக்கே

*Kathalum*
*Karunaiyum*

(A Collection of Poems)

Author:

Pulavar
M. PARVATHINATHASIVAM

First Edition:
MAY 1972

Price: Rs. 2-00

Printers:
Elanganayaki Press,
Kalviyankadu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை.

வித்துவசிரோமணி
## பிரம்மஸ்ரீ சி. கணேசையரின்
மாணுக்கராகிய செந்தமிழ்ச் செல்வர், பண்டிதர்
## இ. நமசிவாயம்

மாவை, புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள் என்னிடம் ஆரம்பக் கல்வி பெற்ற அன்பும் பணிவும் நிறைந்த ஒரு மாணவர். புலவரான பின்பும் தமக்கெழும் ஐயங்களை என்னிடம் வந்து கலந்து பேசித் தீர்க்கும் வழக்கமுடையவர் சில மாதங்களுக்கு முன் என்னிடம் வந்து தாம் முன் செய்த செய்யுள்களைத் தொகுத்து வெளியிடும் ஒரு நூலுக்கு என்னை அணிந்துரை எழுத வேண்டுமென்று கேட்டனர். நூல் முழுவதையும் ஆறுதலாக வாசித்த பின்பே அதுபற்றி எழுதுவேனென்றெண்ணி அங்ஙனமே வாசித்துப் பார்த்தேன். ஆடம்பரமற்ற இயற்கைப்புலவன் பண்டித ம. வே. மகாலிங்கசிவம், அவர் தந்தை, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை என்பவர்களின் ஞாபகம் வந்தது. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்ற துணிவு பிறந்தது.

காதலும் கருணையும் என்னும் இந் நூலில் அரிய பல விடயங்கள் சுருக்கமாக ஆனால் விளக்கமாக அமைந்துள்ளன. செய்யுள்கள் இலகுவான சொற்பிரயோகம் பெற்றுப் பொருள் வளமும் செய்யுட் குறிப்பும் அமைந்து சிறந்த பல புலவர்களை ஞாபகஞ் செய்கின்ற ஓசைநயமும் சொன்னெறியும் பொருந்தி பலவகையணிகளும் அணிந்து இடத்துக்கேற்ற சந்த வேறுபாடு பெற்றுச் செல்கின்றன. 'என்னால் தொல்லுலகியங்குமென்ன மெல்லவே நினைத்தல்' "ஆவியன்ன உடையினால் மேனியின் அழகை மூடமுயன்றிடும் மாதரார்" "நெஞ்சிற் பற்பலவாம் நினைவெனக்குத் தோன்றும் வண்ணம் பாவையவள் நிற்கின்ற காட்சி" "பவளத்தேர் தெய்வமே யுமக்கே" "காவியத்தை நெஞ்சாரப் பாடிவிட்டான்" "என்ன இது. என்ன இது" "செவ்விதழும் எழில் மார்பும் இனிய நோமும் செகந்தனிலே புதுப்பயிற்சியுற்ற வென்றான்" "சரி சரி எல்லாம் மாறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமிதைக் குடிபோய்'' ''பருவந்தருமெருகு'' என்றிவ்வாறு இடையிடையே யடிக்கடி யமைந்த நயமான சொற்றொடர்ப் பிரயோகம் குறிப்பிலும் பொருளமைந்து புலவரின் இயல்பான புலமையைத் தெள்ளிதிற் புலப்படுத்துகின்றன

''ஓடும் பரி மேலூரர் பவன் வீசும் கசை ஒயிலாய் ஆடும் விதம் இது காண் என ஆடும் அவள் கூந்தல் என்ற இடம் சந்தர்ப்பத்துக்கேற்ற ஓசை பெற்று அணியமைந்து அச்சிறப்பால் கூந்தல் ஆடுவதை நேரே காண்பது போன்ற உணர்வைத் தருகின்றது. இங்ஙனம் அமைந்த பல செய்யுள்கள் இடையிடை மிளிர்கின்றன. அபூர்வ வைத்தியர் என்ற தலைப்பில் வந்த செய்யுள்கள் படிக்கும் போதே இன்பந் தரத்தக்க வகையில் அமைந்துள்ளன;

நாடியைப் பார்த்தாரில்லை
    நயனத்தைப் பார்த்தாரில்லை
மாடியைப் பார்த்த வாறே
    மருந்தினை எழுதித்தந்தார்
நாடியைப் பார்த்துத் தந்தால்
    நன்றென்றேன் அயலில் நிற்கும்
லேடியைப்பார்க்க வேண்டும்
    லேட் இன்னே செல் செல் என்றார்;

என்ற செய்யுள் நோயாளி வைத்தியர் மேற்கொண்ட அவநம்பிக்கையையும் வைத்தியரின் அலட்சியப் போக்கையும் நோயாளியின் பணிந்த நம்பிக்கை இழந்த நிலையையும் வைத்தியரின் அலட்சியத்துக்குக் காரணமான உட்கிடக்கையையும் அவ்வுட்கிடக்கை மேற்சென்ற மனத்தின் விரைவையும் விழைவையும் இலகுவான சொற்களால் விளக்கி மனக்கண்ணில் ஒரு காட்சியை நிலை பெறுத்துகின்றது. இதில் ஆசிரியர் ஆங்கிலச் சொற்களை அவை ஆங்கிலச் சொற்களென்று தோன்றாதவாறு வைத்தியன் கூற்றினில் வைத்து எதுகை மோனைகளாகக் கொண்ட சாதுரியம் சொல்லத்தக்கது.

இங்ஙனம் சிறந்த செய்யுள்கள் இந்நூலில் பலவுள. புலவரின் இப்படைப்புத் தமிழ் உலகால் உவந்தேற்றுக் கொள்ளப்படும் என்பதற்கு ஐயமின்று. அவ்வுவந்தேற்றுக் கொள்ளுகை உந்தப் புலவர் மேன்மேல் முயன்று தம் புலமையால் தமிழுலகிற்குப் பயன்தருவாராக.

மயிலிட்டி தெற்கு.                    இங்ஙனம்
12-4-72.                    இ. நமசிவாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை.

## பண்டிதர். க. சச்சிதானந்தன்

B. A. (Hons) Lond. Dip-in-Ed. (Lond)

பேராசிரியர், விஷேட ஆசிரியர் பயிற்சிக் கழகம்

பலாலி, வசாவிளான்.

இறைவன் இல்லையென்றோர்க்கு அவன் இருக்கிறான் என்பதை நிரூபித்துக் காட்ட முடியாது பலர் வேதனை அடைகிறார்கள். ஆனால், அவர்கள் இறைவன் இருக்கின்றான் என்பதை உணர்கிறார்கள். அழகு இதுதான் என்று வரைவிலக்கணம் காட்ட முடியாதாயினும், அழகை உணர்கிறோம். அதே போலத்தான் கவிதைக்கு வரைவிலக்கணம் கூற முடியாதேனும், கவிதையைக் கேட்டவுடன் அதனை உணர்கிறோம்.

பார்வதிநாதசிவம் அவர்களின் கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைப் பொருள்கள் அவருடைய மென்மனத்தை எடுத்துக் காட்டுகின்றன. பணிப்பெண்ணின் பணியாளனாகவும், கடலை விற்கும் பெண்ணுக்கு உருகுபவராகவும், காதல் நெஞ்சினராகவும் இறைவனின் அன்பிலே இன்பம் காண்பவராகவும் தோற்றுகிறார். அன்றியும் அழகுக் காட்சிகளிலும், தமிழன்பிலும் ஈடுபடுகிறார், கொழும்புமாநகரக் காட்சிகளை அவர் நோக்கும் விதம், நாட்டுப்புறவாழ்க்கையை உயர்த்திச் சொல்லும் வகையில் அமைந்துள்ளது. காதலிலும் தியாகத்தையே காண்கிறார்.

அநேக பாடல்களின் சொல்லும் விதம், சொந்த அனுபவத்தை விபரிப்பதாக அமைந்துள்ளன. அதனால் கவிஞன் தானே சொல்லுபவனாக மிளிர்கிறான். மெய்யின்பம் காணும் கவிஞர் "பருவங்கள் தோறும் இன்பம் பாரினில் மாறும என்ற மருமத்தை யானும் இன்றே மண்ணிடை உணர்ந்தேன்" என்கிறார். "தமிழே உன்னை வேண்டி நிதம் தொழுகின்றேன்" என்று தமிழ்ப் பாவையிலும், "சென்றிட்டேன் சுமையதனைச் சுமந்தவளின் பின்னே" என்று தெய்வம் மகிழ்ந்தது என்பதிலும், "ஒருங்குளந் தூண்ட வந்தேன் உவந்தனன் உவந்தேன் என்றேன்" எனச் சிறு காவியத்திலும், பார்வதிநாதசிவம் தானே சொல்லுவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக அமைகிருர்; இது. இத்தொகுதியில் இவர் கையாண்டிருக்கும் ஒரு நுண் முறையாகும். இதன் விளைவால் வாசகர்களோடு தாமே பேசுவது போன்ற உறவுமுறையைக் கையாண்டு அவர்களைக் கவருகிருர்.

தாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கும் தாமே சொல்லுவோனுக அமையும் நுண்முறைக்கும் ஏற்றதாகவே கவிதை யாப்புக்கள் அமைந்துள்ளன. மூவசை கொண்ட இருசீரும், ஈரசை கொண்ட இருசீரும் சேர்ந்த அடிகளாலானவையும், முன்னிலைப்படுத்துதற் கேற்ப விருத்தப்பாட்டிற் பயின்று வரும் யாப்புக்களும் அமைந்துள்ளன.

கவிதைத் தொகுதியை முடிவைத்துவிட்டு நெருங்கிய 'பஸ்' வண்டிகளிலும், இரைச்சலிடும் புகைவண்டியிலும் நீண்ட கிரம வரிசைகளிலும் (கியூ வரிசை நின்ற போழ்து சில அடிகள் தாமாகவே மனத்தில் இசைத்துக் கொண்டு வாயிலும் வந்தன.

"பட்டாணிக் கடலையுண்டு சுவை மிகுந்த பருப்புண்டு மணிக் கடலையுண்"டென்ற சிறுமியின் ஓசை மனதைக் கரைத்துக் கொண்டு வந்தது.

''நாடியைப் பார்த்தார் இல்லை
நயனத்தைப் பார்த்தார் இல்லை
மாடியைப் பார்த்த வாறே
மருந்தினை எழுதித் தந்தார்'' என்று

வைத்தியசாலையிலிருந்து ஏமாற்றத்தோடு செல்லும் நோயாளியின் குரல் நெஞ்சைத் தொட்டு மீண்டும் மீண்டும் வந்தது.

''வண்டுதன்னை நில்லென்று சொல்கின்ற பூவும் உண்டோ'' என்ற வரியிலே ஒரு புதுமை இசைத்தது.

சிறு காவியத்திலே காதலுக்காகக் கண்களைக் கொடுக்கின்ருன். உள்ளத்தைத் தொடுகின்றது. பாத்திரப் படைப்பிலே மிகச் சிறந்ததென்று இலக்கிய மேதைகளால் கொண்டாடப்படுவது சார்ல்ஸ் டிக்கன்ஸின் சிட்னி காட்டன் ஆகும். சிட்னி காட்டன், தான் காதலித்தும் மணக்கமுடியாத லூசிமொனெட்டுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணிக்கக் காத்திருப்பதாக அவளுக்கு ஒரு நாள் கூறுகின்றான். அவள் கணவன் கொலைத் தீர்ப்புப் பெற்ற போது தான் அவனுக்காக உயிர்கொடுத்துக் கணவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்கின்றான். அத்தகைய காட்டனின் தன்மையும், அவன் இருதய மென்மையும், பார்வதிநாதசிவத்தின் காதலும் கருணையும் என்ற சிறு காவியத்தில் இழையோடிச் செல்கின்றது.

சொன்னடை சொற்சேர்க்கை கவியொழுக்கு பார்வதிநாத சிவத்துக்குக் கைவந்தது அவர் விட்ட மூச்சும், உண்டபாலும், கேட்ட முதல் வார்த்தையும், கவிதையென்றால் முற்றிலும் உண்மை. அவருடைய இரத்தத்திலே பல சந்ததியாக ஊறிப்போன கவிதையின் துடிப்பு ஓடிக்கொண்டிருப்பது உண்மை. அவர் தகப்பனார் மகாலிங்க சிவம் என்பதும் பேரனார் ம. க. வேற்பிள்ளை என்பதும் உலகறிந்தது.

இந்நூல் அச்சில் மாத்திரம் வாழாது மக்கள் மனத்தில் வாழுமென்று எண்ணுகின்றேன்.

---

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| மெய்யின்பம் | 9 |
| வாழியரோ தமிழ்ப்பாவை | 12 |
| தெய்வம் மகிழ்ந்தது | 14 |
| எவனை நினைத்தாளோ | 16 |
| உழைப்பும் பொருளும் | 18 |
| துறவி வியந்த வீரம் | 20 |
| நீராடல் | 22 |
| கொடுப்பதில் இன்பம் காண்போம் | 24 |
| காதல் நெஞ்சைக் கவர்ந்த காட்சிகள் | 26 |
| கனவு நனவாமோ | 28 |
| கவிஞனும் துறவியும் | 30 |
| பந்தாடும் பாவை | 33 |
| அபூர்வ வைத்தியர் | 36 |
| கொழும்பு நகரில் சிறிது போழ்து | 38 |
| காதலை அங்குக் கண்டேன் | 41 |
| பொறி ஐந்தை வெல்ல அறிவொன்று போதுமா? | 48 |
| காதலுங் கருணையும் (சிறுகாவியம்) | 50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நூலில் இடம்பெறும் கவிதைகள் யாவும் முன்னரே தினகரன், வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் வெளிவந்தவை. இக்கவிதைகளை வெளியிட்டமைக்கு அப்பத்திரிகைகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ் இலக்கண, இலக்கியப் புலமை வாய்ந்த தமிழ்ப் பேரறிஞர் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்களும், பலரும் போற்றும் கவிஞராகவும், திறனாய்வாளராகவும் விளங்கும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கழகப் பேராசிரியர் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்களும் தொகுதி முழுவதையும் வாசித்து அணிந்துரை வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நான் ஆற்றும் கைமாறும் உண்டோ.

இந்நூலைச் சிறப்புற அச்சிட்ட இலங்கைநாயகி அச்சகத்தினருக்கும், அட்டையை அழகுற அச்சிட்ட சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தினருக்கும், அட்டைப் படத்தைப் பார்த்தோர் யாவரும் வியக்கும் வண்ணம் வரைந்த கலைஞர் மூர்த்தி அவர்களுக்கும் 'புளொக்கை' நல்ல முறையில் செய்து கொடுத்த கொழும்பு ஸ்ரூடியோவினருக்கும் எனது உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை,
7-5-1972.

ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யின்பம்

அன்பொடும் என்னைத் தாயார்
அணைத்தலும் கதைகள் கூறி
நன்மை சேர் உணவு யாவும்
நல்கலும் இடங்கள் தோறும்
பொன்றுடை சிறப்பக் கூட்டிப்
போதலும் தாமே மண்ணில்
இன்பமென் றெண்ணி னேனே
சிறு வனுய் இருந்த நாளில்

ஆற்றினிற் குதித்தல், கொம்பர்
அளித்திடும் காய்கள் உண்ணல்,
சேற்றினை அள்ளிப் பள்ளிச்
சிறுமியர் மீது சிந்தல்,
நூற்றுவர் நண்பர் சூழ
நோவன பலவும் கூறல்,
ஆற்றுதல் இன்பம் என்றே
எண்ணினேன் பள்ளி வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியர் விழியாற் கொஞ்சும்
கவினினில் மயங்கல் அன்றுர்,
பொன்னுடல் தழுவல், பேச்சிற்
புவியினை மறத்தல், மற்றும்
கன்னலை இதழிற் கண்டு
களித்திடல், இன்பம் என்றே
எண்ணினேன் பருவம் என்னும்
எல்லையை அடைந்த காலை,

செல்வத்தை ஈட்டல், தேர்தற்
செருவிலே வெல்தல், மற்ருேர்
சொல் புகழ் எய்தல், என்னுல்
தொல்லுல கியங்கு மென்றே
மெல்லவே நினைத்தல், என்னை
மெச்சுதல், இவையே இங்கு
சொல்லரும் இன்ப மாகத்
தோற்றிய இடை-நாள் வாழ்வில்,

இன்றியான் முதுமை என்னும்
இருட்டறைப் புகுந்தேன், பார்வை
குன்றிற்றுச் செவியும் கேட்கும்
குணத்திற்குத் தொலைவில், ரத்தம்
என்பதும் வற்றிக் கையில்
எடுத்தனன் ஊன்றுங் கோலை
அன்றின்பம் பயந்த வெல்லாம்
அவனியிற் பொய்த்த வென்பால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவங்கள் தோறும் இன்பம்
பாரினில் மாறும் என்ற
மருமத்தை யானும் இன்றே
மண்ணிடை உணர்ந்தேன் என்றும்
திரிபின்றிப் பருவம் தோறும்
திகழ்ந்திடும் பிறவி தோறும்
ஒருபொருள் இன்பம் செய்யும்
உரைக்கரும் தெய்வம் ஆகும்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழியரோ தமிழ்ப் பாவை.

கொன்றையந்து சூடி எழிற் கூத்தாடும்
சிவனாரும் கூற வொண்ணைக்
குன்றமதை எறிந்திட்ட மயில் மேவும்
பெருமானும் கொண்ட அன்பால்
அன்றுதலைச் சங்கத்தே புலவர்களாய்
அமர்ந்தினிது வளர்க்கும் வண்ணம்
நின்ற பெரும் தமிழ்அணங்கே நிலம்போற்றும்
செழுந்தேனே! வாழி! வாழி!

உறுமிடரால் தளராத உயர் தமிழே!
அமுதனையாய்! உயர்ந்த ஞானக்
குறுமுனிதொல் காப்பியர்தம் ஞானத்தே
குதித்திட்ட உயர்ந்த பாவாய்!
நறைசெறிந்த தொகைநூலாம் தொடைவிளங்கு
மார்புடைய நங்காய் இன்பத்
துறையனைத்தும் நீயாகி இனிக்கின்றாய்!
கற்றோர்கள் தொழுகின் றாரால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபெயரால் அழைத்தால் நின் பெருமையிங்கே
அடங்கா தென் றுளமேற் கொண்டே
அரியனவாம் இயல் என்றும் இசை என்றும்
கூத்தென்றும் அழைத்தார் இன்னும்
வருபெயர்கள் எத்துணையோ? யாரறிவார்
எத்துணைதான் வரினும் நின்றன்
திருவினுக்குப் பொருந்துவதே நூலோர்தம்
அகமலரில் திகழும் தேனே!

குன்றாத எழில் மங்கை பலவிதமாய்
நடந்திடினும் குறைந்த தாக
ஒன்றேனும் இருப்பதில்லைப் பாநடையும்
உரைநடையும் உவந்தா யேனும்
நன்றாயே அமைந்தனவே உன்நடையைக்
காலமெலாம் நோக்கும் ஆசை
ஒன்றாலே துடிக்கின்றேன் என்நெஞ்சில்
நடந்தின்பம் உதவும் தேனே!

ஆண்டுசெலச் செலஇளமை எய்துகின்ற
புதுமைகள்சேர் பெண்ணே ஆயும்
ஈண்டுகொளக் கொளச்சிறிதும் குறையாத
புதுமைகள்சேர் நிதியே ஆயும்
நீண்டபுகழ் எனும்பாதை தனில்நித்தம்
செல்கின்ற தமிழே உன்னை
வேண்டிநிதம் தொழுகின்றேன் புவிபோற்றும்
விழுப் பொருளே வாழி! வாழி!

☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வம் மகிழ்ந்தது

தாங்கவொணுப் பெருஞ்சுமையைத்
தாங்கியொரு சிறுமி
தளர்ந்தநடை யுடன்தெருவில்
இளைத்தபடி சென்ருள்
ஆங்கவளின் துயர்கண்டே
அல்லலுற்றங் கோடி
"அருந்தங்காய்! பெருஞ்சுமையைத்
தாங்காதுன் உடல்தான்

ஈங்கதனைத் தாஉனது
வீடுவரை நானே
எடுத்துவந்தே தருகின்றேன்
என்றிட்டேன் அவளோ
தீங்கனிநேர் சொல்லாலே
தங்கையென்றே அன்பைச்
செகத்தினிலே மழையாக்கிப்
பொழிந்தீர்"யா ரென்ருள்

"வள்ளுவரின் குறளதனை
வழியாகக் கொண்டே
வாழ்கின்ற தமிழன்நான்
நீயார்"சொல் லென்றேன்
"உள்ளமிலாச் செல்வர்தம்
மனையினிலே மாடாய்
உழைக்கின்றேன் எனை "வேலைக்
காரி"யென உரைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளளவும் இன்சொல்லை
நான்கேட்ட தில்லை
எருமையென்றும் கழுதையென்றும்
நித்தமெனை விழிப்பார்
துள்ளிவரும் பசித்தீயை
ஓரகப்பை சோற்றால்
துடைப்பதற்கு முயல்கின்றார்
இதுதான்என் கூலி

என்றழுதாள் அவளுக்கோ
உதவிசெய என்பால்
எத்துணையும் பொருளில்லை
ஆதலினால் நானும்
"இன்றிந்தச் சுமையதனை
வீடுவரை உனக்காய்
எடுத்துவர அனுமதிதா"
என்றிட்டேன் இசைந்தாள்

சென்றிட்டேன் சுமையதனைச்
சுமந்தவளின் பின்னே
"சீச்சீச்சீ பணிப்பெண்ணின்
பணியாளன்" என்றே
சென்றவர்கள் நகைத்தார்கள்
ஆனாலும் என்றன்
செயல்கண்டு மகிழ்ந்ததுவே
எனைப்படைத்த தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவனை நினைத்தாளோ?

எல்லைகள் தமைநீத்தாள், யாழென் கின்ற
இசைக்கருவி தனைமறந்தாள், சுவைவாய்ந் திட்ட
நல்லுணவை வெறுத்திட்டாள், மலர்கள் ஈயும்
நறுமணத்தைச் சினந்திட்டாள், நிலவும் தன்னைக்
கொல்லுமென நினைத்திட்டாள், நறுஞ்சாந் தத்தை
கொடுந்தணலோ எனப்பார்த்தாள், அழகே வாழும்
இல்லினையும் இகழ்ந்திட்டாள் தேர்ந்தாற் சொல்லும்
இத்துணைக்கும் இவள் எவனை நினைத்திட் டாளோ?

பொற்குவையை மண்ணுக்குச் சமமென் கின்றாள்
புகழ்பெருமை இவைதனக்குத் தூசென் கின்றாள்
பெற்றவரும் இம்மைக்கே உறவென் கின்றாள்
பேருறவுக் கவனொருவன் உளனென் கின்றாள்
கற்றவரும் காணாத உண்மை யொன்றைக்
கண்டவள் போல் சிரிக்கின்றாள் வல்லேம் என்னும்
தற்பெருமை உடையோர்பால் இரங்கு கின்றாள்
சாற்றிடுவீர் இவள்எவனை நினைத் திட்டாளோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணியனைத்தும் போமவனை அடைந்தால் என்றே
பெருந்துணிவோ டுரைக்கின்றாள்! ஆசை என்னும்
மணிஅவன்முன் ஒலியிழந்து போமென் கின்றாள்
மனம்சிறுகைக் குழந்தையைப்போ லாமென் கின்றாள்
அணியுறுந்தன் நெஞ்சினிலே இடமுண் டென்றும்
அவனுக் கே அவனுக்கே அஃது மென்றும்
துணிவினுடன் கூறுகின்றாள் தெரிந்தீ ராயின்
சொல்லிடுவீர் இவள்எவனை நினைத்தாள் என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைப்பும் பொருளும்.

"ஓங்கிவளர்ந் திடருறுத்தும் வறுமை போக்க
உரைத்திடுவீர் வழி"யென்றேன் நண்பர் கூட்டம்
ஆங்குபல மணிநேரம் முயற்சி செய்தே
ஆய்ந்தெடுத்த வழியெல்லாம் கூற லானார்
"தேங்கிவரும் செல்வத்தை உடைய மங்கை
செவிடாகிச் சிறுகுருடாய் இருப்பா ளாகில்
ஈங்கவளை மணப்பதனுல் செல்வம் சேரும்
இதுவெறுப்பைத் தந்திடுமேல் இன்னும் சொல்வோம்

பணமிழந்த காலத்தே நம்மை விட்டுப்
பாய்ந்தோடும் சுற்றம்போல் வேக மாகக்
கணமொருகல் ஓடுகின்ற குதிரைக் கேநீ
காசுகட்டின் முதற்பரிசு பெறலா மின்றேல்
பணமுனது முன்னோர்கள் புதைத்தி ருப்பார்
பார்த்தெடப்பா சோதிடத்தால்" என்றும் சொல்லித்
திணறவைத்தார் நண்பர்கள் அவர்தம் சோம்பல்
சேர்த்தென்னைத் தழுவிடவே சோர்ந்து நின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பட்டாணிக் கடலையுண்டு சுவைமி குந்த
பருப்புண்டு மணிக்கடலை யுண்டென் றங்கே
கட்டான உடலசையக் கடலைப் பெட்டி
கையினிலே கொண்டங்கு சிறுமி வந்தாள்
எட்டேதான் வயதென்று தோற்றம் காட்ட
இடையிலுள்ள கந்தைஅவள் வறுமை காட்ட
விட்டேனு உனையென்றே வறுமை தன்னை
வெலமுயலும் உழைப்பாளி அங்கே வந்தாள்

தன்னுடைய சிறுமிசெய்த உண்டி தாய்க்குத்
தனியினிமை அளிப்பதுபோல் கடலை அங்கே
என்னுடைய நாவினிலே இனிமை சேர்க்க
இதயமெலாம் அவள்திறனை வியந்து நோக்க
"உன்னுடைய உழைப்புக்குப் பரிசி"தென்றே
உவந்தளித்தேன் மேலதிக மாய்ப்ப ணத்தை
தன்னுடலால் உழைக்காது செல்வம் சேர்த்தல்
தவறாகும் எனச்சிறுமி சொல்லி னுளே

சொல்லியபின் எனதுபண மிகுதி தந்து
சோராத உழைப்பாளி அப்பால் சென்றுள்
செல்வமிங்கு தேடுதற்கு வழிகள் சொன்ன
திறமைமிகு நண்பர்கள் தரையைப் பார்த்தே
நல்வழியில் உழைத்தேநாம் சோம்பல் போக்கி
நலமுறுவோம் என்றுர்கள் சிறுமி அங்கே
செல்வழியைப் பார்த்து நின்றேன்அவளின் தோற்றம்
செல்லாது நெஞ்சிருந்தே உழைக்கத் தூண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவி வியந்த வீரம்.

"பொங்கிடும் சினத்தி ேனாடும்
புவியினை அதிரச் செய்யும்
வெங்குரற் சிங்கம் மீது
விரைந்துபாய்ந் தடக்கும் வீரன்
இங்கிவன் அறிவா" யென்றே
இயம்பினர் உள்ளோர் கண்டும்
அங்கெதும் துறவி வார்த்தை
அவர்களுக் குரைத்தா னில்லை

"கரையினை உடைத்தும் ஓங்கும்
கவர்மரம் தன்னை வீழ்த்தும்
தரையினில் ஓடும் வேகத்
தண்புனல் ஆற்றின் போக்கை
முறையுற எதிர்த்தே நீந்தும்
மொய்ம்பினன் இவனே" என்றார்
உரையினைத் துறவி கேட்டும்
ஒன்றுமே மொழிந்தா னில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போரினில் வாளை ஏந்திப்
பொலிந்தபல் களிற்றை யெல்லாம்
பாரினில் புரளச் செய்யும்
பண்புசேர் வீர" னென்றே
நேருற நின்றோன் தன்னை
நெடிதுமே புகழ்ந்து சொன்னார்
சீருறு துறவி வார்த்தை
சிலவுமே புகன்று னில்லை.

"ஆண்டினால் இளைஞன் நல்ல
ஆக்கையே உடையன் நின்று
தூண்டிடும் காம மென்னும்
துர்ப்பகை வென்றான்" என்றே
ஆண்டொரு வீரன் தன்னை
அறிமுகம் செய்யும் காலை
"ஈண்டுநீ வருக" என்றே
இயம்பினன் துறவி மேலும்

"மற்றவர் தாமும் வீரர்
ஆயினும் மறைந்து வாழும்
குற்றமாம் காமம் தன்னைக்
கூறரும் அறிவால் வென்ற
கொற்றமே கொற்றம்! நீயே
கொள்கைசேர் வீர" னென்றே
பற்றிலாத் துறவி தானும்
பாரினில் ரசிக்க லானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீராடல்.

மன்னு செங்கதிர் பாய்தலின் நல்லுடல்
மாசில் தேசில் விளங்கிச் சிறப்பவும்
பொன்னை யொத்த முகத்தினில் நீர்த்துளி
பொலியும் முத்தை நிகர்த்து விளங்கவும்
இன்னிசை கொண்டு பாடியும் பேசியும்
இளமை நல்கும் துடிப்பது தோன்றவும்
அன்ன மென்னடை மாதர் குளத்திலே
அழகு தோன்ற நீ ராடுதல் செய்வரால்

அரும்பை வெல்லும் தனத்தினில் மீனினம்
அரிதில் முட்டி விலகிடும் போதெலாம்
விரும்பு காதலர் செய்யும் குறும்பினை
மெல்ல எண்ணியும் நாணியும் அப்புறம்
திரும்பு போதினில் தாமரைப் போதினில்
சீர்சால் வண்டு துணையினைக் காதலால்
விரும்பிச் சேர்ந்திடும் செய்கையைக் கண்டுமே
வேறோர் எண்ணம் உதிக்க நகைப்பாரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவி யன்ன உடையினால் மேனியின்
அழகை மூட முயன்றிடும் மாதரார்
காவி யென்ன விழியினு லாயிரம்
காவி யங்களை ஆக்கியும் காதலர்
ஓவி லாது மயங்கிடச் செய்திடும்
ஒளி கொள் தோளினைத் தாமே ரசித்துமே
மேவு நீர்கொள் குளத்தினில் இன்பமே
விளங்கக் கண்டும் மகிழ்ந்துநீ ராடுவார்

"கண்டும் கேட்டும் உயிர்த்தும் இனிதினில்
உண்டும் உற்றும் கொளுஞ்சுவை நல்கிடும்
கெண்டை ஒத்த விழியுடை மாதரீர்!
கேள்வர் தம்மிடம் எங்களில் யாரையோ
கொண்ட காதல் உரைக்க அனுப்புவீர்
கூறுவீர்" என்று கேட்டவர் பக்கமே
வண்டும் தென்றலும் வந்திடக் கண்டுமே
மகிழ்ந்து மாதரார் நீரினில் ஆடுவார்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பதில் இன்பம் காண்போம்!

"கஞ்சமலர் முகத்தாலே காதலினை
நிதம்வளர்க்கும் துணைவீ! அந்தப்
பஞ்சணையை எடுத்துவிடு பாயொன்றே
போதுமினிப் பாரில் நாளும்
துஞ்சுவதே அதனில்தான் ஏனென்று
கேட்கின்றாய் துயரால் வாடும்
பஞ்சையர்கள் தெருவினிலே படுக்கின்றார்
நமக்கு மட்டும் பகட்டும் வாழ்வா?

அறுசுவையூண் சமைக்காதே! கஞ்சி மட்டும்
இனித்தருவாய் அதுவும் இன்றி
வறியவர்கள் பலர் அலைய நமக்கு மட்டும்
சுவையூணேன்? மற்றும் உன்றன்
நெறியான கற்பென்னும் அணியிருக்கப்
பிறவணியேன்? நெஞ்சில் அன்பைக்
குறியாக வளர்ப்பவளே வா! ஏழை
பசிதீர்க்கக் கொடுப்போம் இன்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுடைக்கே ஓய்வளிப்பாய் பருத்தியையே
இனியுடுப்பாய் பாரில் கந்தல்
கட்டுபவர் உள்ளவரை நாமுடையைக்
குறைத்திடுவோம் கருணை வெள்ளம்
கொட்டுகின்ற நெஞ்சுடையாய் வா!பிறர்க்குக்
கொடுப்பதிலே இன்பம் காண்போம்
இட்டமிலார் வேண்டுமட்டும் சேர்க்கட்டும்
இதயமுளோய் கொடுப்போம் இன்னே

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் நெஞ்சைக் கவர்ந்த காட்சிகள்.

"நீலநிறக் கடலெனும்நல் உண்டி யற்கண்
நேற்றினிதின் விழுந்தஎழிற் பொற்கா சென்னும்
கோலமிகு கதிர் இன்று தோன்றும் காட்சி
கூறரிய அன்புடையீர்! காண்க!" என்றே
பாலினொடு தேன்கலந்த சொல்லாற் கூறிப்
பருகுதற்குத் தேநீரும் கொண்டே வந்து
காலைநிதம் என் அன்புக் குரியாள் உள்ளம்
கனியஎனைத் துயில் எழுப்பும் காட்சி ஒன்றே

முற்பகலில் விரைந்தோடும் நேரக் காற்றின்
முன் விரைந்து காலைசெயும் கடன்கள் ஆற்றி
நற்பணிக்குப் புறப்படுங்கால் ஏதோ ஏதோ
நாடிவந்து கிடைத்திடுமோ? எனும்நோக் கோடு
பொற்பமைந்த கோங்கரும்பும் நெஞ்சின் நீங்காப்
புதுமைசெயும் பங்கயமும் தாங்கி நெஞ்சிற்
பற்பலவாம் நினைவெனக்குத் தோன்றும் வண்ணம்
பாவையவள் நிற்கின்ற காட்சி ஒன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிச் சோர்விஞெடு வீடு நோக்கிப்
பாலநடை பயில்கின்ற மாலைப் போதில்
அணிமாடத் தினில்நின்றே கண்ணுற் பற்றி
அகந்தாவ அதைத்தொடர்ந்தே வாயில் நாடிப்
பிணி போக்கும் குரலினிலே "வருக!" என்றே
பேரழகுப் பாவைநிதம் அழைப்ப தோடு
பணிவினுடன் பண்பினையும் விளக்கிக் காட்டும்
பகரரிய எழில்மேவும் காட்சி ஒன்றே!

அந்தியெனும் நறும்போதில் இளமை என்னும்
அரியமலர் மலர்ந்தசைய இனிய தென்றல்
வந்துபல கதைகூற இதய வானில்
வயங்குகின்ற இன்நினைவாய் மீன்கள் தோன்றப்
பைந்தொடியின் ஒலியிஞெடும் மெல்ல வந்தே
"பவளத்தேர் தெய்வமே உமக்கே" யென்று
செந்தமிழிற் சொலநினைத்தும் சொல்லா நிற்கும்
சீரான சுவைபடைத்த காட்சி ஒன்றே!

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு நனவாமோ?

சந்தனமும் சண்பகமும் சிறந்து தென்றல்
தனக்கினிய மணம்புரிந்து மகிழும் காவில்
செந்தமிழிற் பண்கலந்து தோழிமார்கள்
செயுங்குறும்பில் உவந்திருந்தேன் இருந்தாற்போலப்
பந்தனைய விரலினர்கள் மறைந்தார் நானும்
"பாவையரே வம்மி"னென அழைத்தேன் அங்கே
வந்தனளோ ஓர்இளைஞன் மதியே உன்னை
வருந்தவிட்டம் மீனினமேன் போனதென்றான்

அஞ்சாதே நானுள்ளேன் என்றான் பின்னர்
ஆவலினால் தோள்தொட்டான் காத லென்னும்
கஞ்சாவால் மயக்கினான் இன்ப மென்னும்
காவியத்தின் முதலடியைப் பாடி என்னை
எஞ்சியதைப் பாடென்றான், மௌனம் கொண்டேன்
எதையுமவன் நோக்கவில்லைக் காவியத்தை
நெஞ்சாரப் பாடிவிட்டான் வண்டு தன்னை
நில்லென்று சொல்கின்ற பூவும் உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னவனென் கழுத்தினிலே மாலை யிட்டான்
பேருவகைக் கடலினுக்கே அழைத்துச் சென்றான்
என்னஇது? என்னஇது? என்ற தன்றி
எவ்வுரையும் சொலலின்றி மகிழ்ந்தேன் அன்னான்
கன்னலிது வெல்லமிது தேவர் தாமும்
காணரிய அமுதமிதென் றுடலாம் யாழைத்
தன்னுடைய கைகொண்டு மீட்டான் இந்தத்
தரையினிலே முன்கேளா இசையைக் கேட்டான்

செவ்விதழும் எழில்மார்பும் இனிய தோளும்
செகந்தனிலே புதுப்பயிற்சி உற்ற வென்றான்
அவ்வரிய பயிற்சியினைக் கால மெல்லாம்
அடைவதற்கு விரும்பினேன் தோழீ! நேற்றைக்
கிவ்விதமோர் கனவுகண்டேன் கண்ட தான
இக்கனவு நனவாமோ இயம்பாய் என்றே
மைவிளங்கும் கண்கொண்ட தலைவி மெல்ல
மனமுவந்த தோழியினைக் கேட்க லானாள்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞனும் துறவியும்

“காரவள் கூந்தல் நல்ல
கவின்மலர் கண்கள் முல்லை
நேரவள் பற்கள் இன்ப
நிலையவள் வதனம் பூவின்
சீரவள் இதழ்கள்” என்றோர்
செந்தமிழ்க் கவிஞன் கூறிப்
பாரினில் மகிழுங் காலை
பற்றிலாத் துறவி வந்தான்

“என்பொடு தசையின் சேர்க்கை
இவ்வுடல் ஆவி போனால்
பொன்னிகர் மேனி தானும்
புழுக்கட்கே இடம தாகும்
அன்பினை இதன்மேல் வைத்தல்
அறிவிலார் செய்கை மைந்தா!
நன்கிதைப் புனைந்து பாடும்
நலமிலாச் செயல்கொள் ளாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் பொதும்பர் தன்னில்
கவின்செயும் மலரும் மற்றும்
கோலமார் மரங்கள் ஈயும்
கொழுமைசேர் கனியும் எல்லாம்
ஞாலமேல் நிலைத்தல் உண்டோ?
நன்கவை அழகும் வாடும்
பாலகேள் மாதர் பண்பும்
பாரினில் அவ்வா றேதான்"

என்றவண் துறவி கூற
இளங்கவி சிரித்தான் "ஐய
குன்றிடா ஒளிசெய் கின்ற
கொழுஞ்சுடர் விளக்குக் காலை
துன்றிடின் ஒளியிற் குன்றித்
தோற்றமும் இழந்து போகும்
என்றதை நன்றி யின்றி
எறிபவர் தாமும் உண்டோ?

காலையில் அழகு செய்த
கதிரவன் உச்சி யெய்தும்
வேளையில் அழகு குன்றும்
வெண்முழு நிலவும் மெல்ல
நாளொரு விதமாய்க் கொண்ட
நல்லெழில் குறையும் என்றே
ஆழிசூழ் உலகில் யாரும்
அவற்றினை வெறுப்பார் உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதரின் அழகும் ஓர்நாள்
மாறிடும் இயற்கை இன்றேன்
தீதென ஒதுக்க வேண்டும்
தேர்ந்துசொல் பெரியோய்!" என்றே
கோதிலாக் கவிஞன் கேட்டான்
கூறிட விடையை ஆய்ந்தே
யாதொன்றும் காணு ஞகிப்
போயினுன் துறுவி தானும்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பந்தாடும் பாவை

இருபந்தினை நிதமேந்திடும்
எழில்மேவிடும் இனியாள்
ஒருபந்தொரு கரமேந்தவும்
பிடிநாணவும் ஒயிலாய்
வருகின்றனள் அவளாடிடும்
வகைகண்டிட விழிகாள்
பெருமன்பொடும் உறநோக்குவிர்
இமையீர்அது பிசகால்

எறிகின்றனள் பந்தேஅது
மேலேகியும் இவள்பால்
வெறிசெய்திடும் சுவையுண்டெனும்
விழைவால்மிக விரைவாய்
குறிகொண்டவள் தனமேலொரு
குதிபோட்டது மீண்டும்
சிறிதங்கது மேலேகினும்
திரும்பும்நனி காணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும்பரி மேலூர்பவன்
வீசும்கசை ஒயிலாய்
ஆடும்விதம் இதுகாணென
ஆடும்அவள் கூந்தல்
பாடும்கரு வண்டேநிகர்
விழியோஇது போழ்தில்
ஆடும்ஒரு பந்தின்வழி
ஓடும்தனி அழகால்

செவ்வாழையின் இருதண்டுகள்
சேர்ந்தேஇவள் நம்மை
இவ்வாறிடர் செய்வாளென
எதிர்பார்த்திலம் எனவே
எவ்வாயினும் அவளேஉளள்
எனுமாறவள் கனிநேர்
செவ்வாயெழில் நகைகூட்டிட
மிகஆடினள் இனிதே

காற்றிற்படு பூவோ? இது
கடலிற்படு கொடியோ?
ஆற்றிற்படு தளிரோ?என
அசைந்தேவெகு விரைவாய்
சாற்றின்சுவை சாற்றும்இதழ்ப்
பாவைகுரற் பூவை
ஆற்றல்கொடு பந்தாடினள்
அடடாஅதும் அழகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம்தரு மெருகால்உடல்
பசும்பொன்னென மிளிர
வருமோர்ரதம் இதுவேயென
வந்தாளவள் அழகைப்
பருகும்பொழு திதுவேவிழி
பார்!பார்!இது போழ்தில்
உருகும்மனம் உருகாவணம்
தடையும்செயல் முறையோ?

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபூர்வ வைத்தியர்

நோயொன் றுவரஎன் யாக்கை
நொந்திட அரசாங் கத்தார்
நேயங்கொண் டெமக்கென் றீந்த
நெடும்மருத் துவசா லைக்குப்
போயென்றன் நோயை மாற்றும்
புத்தாசை தோன்ற நானும்
மாயங்கள் பலவும் செய்யும்
மருத்துவ சாலை சென்றேன்

வரிசையில் நூற்று வர்ப்பின்
வதங்கியே உயிரைக் காக்கும்
புருஷரை ஈற்றில் கண்டேன்
"புதல்வனே! நினக்கென்?" னென்றார்
"வருஷமொன் றுக நோயால்
வாடுகின் றேன்யா" னென்றேன்
"சரிசரி எல்லாம் மாறும்
தருவதைக் குடிபோய்!" என்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடியைப் பார்த்தார் இல்லை!
நயனத்தைப் பார்த்தார் இல்லை!
மாடியைப் பார்த்த வாறே
மருந்தினை எழுதித் தந்தார்
"நாடியைப் பார்த்துத் தந்தால்
நன்"றென்றேன் அயலில் நிற்கும்
"லேடியைப் பார்க்க வேண்டும்
லேட் இன்னே செல் செல்" என்றார்.

"நோயாளைப் பார்த்தி டாதே
நோயினைக் கூறும் மன்னர்
ஓயாமல் அரசாங் கத்தில்
உயர்பணி செய்வ தாலே
நோயேதும் மறைவ தில்லை"
என்றுநான் நுவன்றேன் "சுத்த
வாயாடி" என்று கூறி
வார்த்தைகள் மேலும் சொன்னார்.

"எங்களின் கண்ணைப் பற்றி
ஏதும்நீ அறியா யப்பா!
அங்குனைக் காணும் போதே
அறிகுவோம் நோயை மற்றும்
இங்கெமைச் சார்வோர்க் கெல்லாம்
எம்மிடம் மருந்து மொன்றே
பங்கம்செய் உயர்வும் தாழ்வும்
பார்த்திடோம் அதனா" லென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நகரில் சிறுபோழ்து

விடியுமுன் எழுந்தே ஓடி
விரைந்துபல் மினுக்கித் தேநீர்க்
குடியினை நயந்து நண்பர்
குளிக்குமுன் குளித்துப் பின்னர்
உடையினை அணிந்தே உண்டி
உண்டிடும் கடைக்குச் சென்று
படையென ஈக்கள் மொய்க்கும்
பண்ணியம் பலவும் பார்த்தேன்.

நாயொன்று வாலை ஆட்ட
நன்கனம் பூனை கத்த
ஈயெலாம் இலையில் வீழ
இருந்திட்டேன் என்னை நோக்கி
நோயெலாம் சமயம் பார்க்கும்
நுட்பமும் அறிந்தேன் மெல்ல
வாயெலாம் பற்கள் தோன்ற
வந்தனன் ஒருவன் ஆங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோசையா? பிட்டா? அன்றிச்
சொல்லரும் அப்பம் தானு?
ஆசையை எதன்மேல் வைத்தீர்
அதைஇப்போ துரையும்" என்றே
மேசையில் கையை ஊன்றி
வேங்கையின் குரலில் கேட்டான்
"பூசையை நாயைப் போக்கிப்
போய்த் தோசை கொணர்க" வென்றேன்

கல்லொடு மண்ணும் சேர்த்துக்
கடையினில் செய்த தோசை
பல்லொடு செய்த போரில்
பலத்ததோர் வெற்றி காண
மெல்லவே எழுந்தே யந்த
இலைப்பொருள் எறிந்தே பிள்ளாய்
"பில்லினைக் கொணர்க" வென்றேன்
பெற்றனன் கொடுத்தேன் வந்தேன்.

பீடுறும் இரட்டைத் தட்டுப்
பேரொலி பஸ்நா னேற
ஓடியே ஒருவன் வந்தே
உளக்கினன் நொந்தும் நானே
கேடொன்று மில்லை நன்றி
என்றுமே கிளர்ந்து பஸ்ஸில்
ஆடுமோர் பாவை போல
அசைவொடும் நிற்க லானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனின் கையின் கண்ணே
சிக்கியே நோதல் மிக்க
உறுகின்ற அப்ப ளத்தை
உலகினில் கண்டோர்க் கேநான்
இறும்வகை உற்ற துன்பம்
இயம்புதல் கூடும் சற்றுப்
பொறும்மேலும் நிகழ்ந்த செய்தி
புகலுவேன் நிகழ்ந்த வாறே.

பையினில் ஒருவன் நல்ல
பணமுண்டோ என்று பார்க்கக்
கையினை விட்டான் நானே
கருணையோ டவனைப் பார்த்தே
"பொய்சொல்லேன் தம்பி" பஸ்ஸில்
புகும்போதே உன்றன் அண்ணன்
பையினில் இருந்த வெல்லாம்
பண்புடன் எடுத்தான்" என்றேன்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலை அங்குக்
# கண்டேன்

அன்றுமுதல் இன்றுவரை
    ஆண்மனத்தும் பெண்மனத்தும்
நின்று செழித்துவரும்
    நீள்உணர்வாம் காதலினை
பாவலர்தம் பாட்டினிலும்
    பல்கும் கதைகளிலும்
ஓவியர்தம் சித்திரத்தும்
    ஒப்பற்ற சிற்பத்தும்
கண்டுணர்ந்த என்னெஞ்சம்
    கண்டவிதம் மானிடர்கள்
கொண்டிருக்கும் வாழ்வினிலும்
    காணுநசை கொண்டமையால்
பொய்யும் வழுவும்
    உலவும் புவித்தலத்தே
பையநடை மேற்கொண்டேன்
    பார்க்கும் மனத்தோடே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானளவும் மாடிதனில்
வாசனையே வீசுகின்ற

தேனுலவும் பூப்பொலிந்த
தேசுலவும் பஞ்சணையில்

கூற்றுவனைப் பற்றிப்
புராணங்கள் கூறிவைத்த

தோற்றத்தைக் கொண்டோன்
சுகம்நாடி நிற்பதையும்

அண்மையிலே பேரழகின்
படைப்பாய் அமைந்துள்ள

பெண்மயிலாள் பொய்ச்சிரிப்பைப்
பெற்றவனை நோக்கியே

"காதலரே செய்தவமே
காண்ககனி" என்பதையும்

மேதினியிற் கண்டேன்
மிகவும் துயர்அடைந்தேன்

அன்புபற்றி ஒன்றுகும்
ஆண்பெண் இதயங்கள்

பொன்பற்றிச் சேர்ந்திட்டாற்
பொய்வாழ்விற் காதலுண்டோ?

அப்பாலும் சென்றேன்
அடுத்தோர் பெருமையில்

ஒப்பேதும் இல்லா
உயர்ந்த பதவிபற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாரோர் எல்லாம்
"இவன்பெரியன்" என்றுரைக்க
எப்போதும் கேட்கும்
இயல்புபெற்ற ஓர்முதியர்!
வாலிபத்தின் வாயிலிலே
வந்துநின்ற பெண்ணழகைத்
தாலிகட்டி வந்தே
தமக்கு மனைவியென
ஆமென் றவளும்
அருகிருந்தே "காதல்வழிப்
போ"மென் றுரைத்தேயோர்
பொய்ந்நகையைச் செய்வதையும்
பார்த்தேன் மிகநொந்தேன்
பாரினிலே அன்பென்னும்
சீர்ப்பாதை தன்னிலே
சேர்கின்ற ஆண்பெண்ணுளம்
ஏதோ பதவிபற்றி
இன்னலுடன் ஏய்வதெனில்
தீதான அவ்வாழ்வைச்
சீர்க்காதல் மேவிடுமோ?

மேலும்நான் சென்றேன்
விளங்குமொரு சோலையிலே
கோலம் நிறைந்த
ஒருத்தி குயிலனையாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதலத்தைப் பார்த்தாளாய்ப்
புன்னகையே பூத்திருப்ப
ஆதரவு கொண்டோனாய்
அங்கேயோர் ஆணழகன்
"பொன்கொண் டமைத்த
புதுச்சிலையே! இன்னமுதே!
மின்கொண் டமைத்தஇடை
கொண்டிருக்கும் நற்பொருளே
பட்டனைய மேனியிலும்
பால்வண்ணப் பற்களிலும்
மொட்டவிழ்ந்த பூப்போல்
விளங்கும் இதழினிலும்
ஆடாமல் நெஞ்சத்தை
ஆட்டிவைக்கும் தாமரையின்
பீடேயும் நல்லரும்பின்
பேர்உணர்த்தும் தோற்றத்தும்
உள்ளம் இழந்தேன்
ஒண்டொடீ! ஆசையெனும்
வெள்ளம் தலைக்குமேல்
மேவிடவே தத்தளித்தேன்
என்றுரைத்துத் தாவி
எடுத்தணைத்தான் அன்னவளும்
நன்றென் றுணர்ந்தனளாய்
நாணினள்போல் நின்றிட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தும் காதலையான்
கண்டிலேன் ஆக்கையது
செவ்விதனில் கொள்கின்ற
தீப்பசியைக் காதலென்றல்
மான்குட்டி நல்லழகில்
வேட்கையுறும் ஓநாயும்
"நான்கா தலன்" என்றே
நன்குரைத்துப் போட்டியிடும்

பின்னர்நான் அவ்விடத்தை
நீங்கியொரு பேரில்லைத்
துன்னினேன் அவ்விடத்துத்
தூயஇரும் பின்நிறத்து
மங்கை ஒருத்தி
இருந்திட்டாள் வந்தவனே
"தங்கமே" என்றவள்பால்
தான்பெற்ற சீதனத்தை
எண்ணி நகைபுரிந்தான்
இவ்விடத்தே காதலினைக்
காண விழைதல்
கடுமிருளில் தாமரையைக்
காண விழைதல்
நிகர்க்குமென மேற்சென்றேன்

ஓட்டைக் குடிசைதனில்
ஓர்சிறிய பாயினிலே
வாட்டுகின்ற நோய்க்கு
வருந்தி ஒருமுதியள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து கிடந்திட்டாள்
இவ்வுலகப் பள்ளியிலே
சேர்ந்து படிக்கின்ருள்
ஆண்டெண்ப தாகஅவள்
அன்னவளின் பக்கத்தே
ஓர்முதியன் அன்புடையோன்
நன்கிருந்தான் அன்ஞன்
நரைதிரையைச் சேர்ந்தமையால்
நாமிருக்கோம் என்றுபற்கள்
தாமே புறப்பட'நீர்
போ'மென்று கூறிப்
புன்னகையே செய்துவிட்டுப்
பாயிற் கிடந்திட்ட
பண்பார் முதியவளின்
நேயத்தே நின்றுலவும்
நெஞ்சுடையோன் மெல்லஅவன்
தன்னுடைய அன்பு
ததும்பும் துணேவியிஞேர்
இன்னல் நிலேகண்டே
ஏங்கி உயிர்துடித்துக்
"கஞ்சி உளது
குடி" என்ருன் காற்றின்மைக்
கஞ்சி விசிறியிஞல்
வீசிஞன் அன்னவளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேற்றிரவு முற்றிலுமே
நித்திரையை விட்டெனக்குத்
தேற்றுமொழி கூறியே
செய்தீர் உதவியெலாம்
இவ்வேளை என்றாலும்
சற்றுறங்கும்" என்னஅவன்
"இவ்வேழை உள்ளமுன்றன்
இன்னல்நிலை கண்டபின்னும்
நண்ணுமோ நித்திரைதான்
நான்உறங்கல் நீசுகத்தை
நண்ணியபின்" என்று
நவின்றிட்டான் ஈருயிர்கள்
ஆக்கை அழகில்
மயங்காமல் அன்பென்னும்
வாழ்க்கைக் கடலினிலே
ஒன்றாகி ஓருயிர்க்கா
ஓருயிர் நின்றேங்கும்
உயர்நிலையிற் காதலது
பேரழகைக் கண்டேன்
பெரிதும் மகிழ்ச்சியுற்றுக்
"காதலர்கள் வாழ்"கவென்று
வாழ்த்திக் கனிந்தவர்தம்
பாதமலர் தொட்டேன் பணிந்து.

☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறி ஐந்தை வெல்ல அறிவொன்று போதுமா?

பொறியைந்தும் செய்பொல்லாச்
    செய்கையினைப் பூமேல்
அறவெல்ல வேண்டுமே
    என்னும் அருநினைப்பால்
ஆன்றோர்செய் நூல்கற்றும்
    அன்புவழி நிற்கின்ற
சான்றோர்தம் சொற்கேட்டும்
    தாமாய் எனைச்சார்ந்த
போகத்தை எல்லாம்
    புறத்தெறிந்தும் தர்மமெனும்
தாகத்தால் காடும்
    மலையும் தவித்தலைந்தும்
அல்லலை நானே
    அழைத்தும் சிறிதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லல் அறியாமல்
விம்மினேன் இப்பொறிகள்
ஈசற்குச் சூட
மலர்ந்த மலர்கள்இவை
ஆசைக்குச் சூட
அகம்விரும்பேன் அந்தோ
அறிவென்னும் ஒன்றை
உடையேனே ஆயின்
பொறிஐந்தை வெல்லஇது
போதுமா என்றென்றும்
ஐந்தொழில்கள் என்கின்ற
ஆட்டத்தில் நாட்டமுறும்
எந்தாய் இறைவா
இதுவரையும் நின்கோயிற்
பாதையை விட்டுப்
பலதூரம் சென்றதனுல்
வாதை அடைந்தேன்
வழியறிய நீயீந்த
சீரறிவோ நன்மையைக்
கற்பிக்கும் நிற்பதற்கு
நேரருளும் ஈவாயே நீ.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலும் கருணையும்

## (சிறு காவியம்)

மன்னுயிர் வாழ்தல் வேண்டி
வாழ்ந்திடும் உழவ ராலும்
இன்னுயிர் கொடுத்தும் நன்றே
இயற்றிடும் சான்றோ ராலும்
பொன்னினும் விருந்தை மேலாய்ப்
போற்றிடும் மாத ராலும்
மன்னிய புகழ்சேர் ஓரூர்
மண்ணிடை விளங்கிற் றுலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழில்நிலம் எனுமவ் வூரின்
இனியவோர் ஆற்றின் ஓரம்
அழகுசேர் குடிசை ஒன்றில்
அறமெனுங் கொடி தந்திட்ட
பழமென ஒருவன் வாழ்ந்தான்
"பல்கிடும் துயரைப் போக்கும்
முழுமருந் தவனே" யென்று
மொழிந்தனர் ஊரோர் எல்லாம்!

பெருகிய தமிழ்நூல் யாவும்
பிழையறக் கற்றோன் காணும்
இருவிழி இழந்தோன் கல்வி
எனும்விழி ஒன்றுள் ளோனாய்
அருளெனும் இன்சொல் லிற்கோர்
அரும்பொருள் தானே யாகிக்
"குரு"வெனப் பாரோர் ஏத்தக்
குடிப்புகழ் வளர்த்தே வாழ்ந்தான்

சிறுவர்க்கு மிளைஞர் கட்கும்
செந்தமிழ் அமிழ்தை ஊட்டல்
நெறியினை உணரா தோர்க்கு
நீதியை எடுத்துக் காட்டல்
அறிவினை வளர்க்கும் நூல்கள்
அங்குளோர் படிக்கக் கேட்டல்
முறைதவ றாதே தானும்
முழுமனத் துடன்செய் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலோர் ஒழுங்கு கொண்டே
வருத்தமோர் சிறிது மின்றித்
தாழ்விலும் இன்பங் காணும்
தகுதியோ டிருந்தோன் தன்னை
ஊழ்வினைக் கஞ்சி யஞ்சி
யொவ்வொரு கணமும் சாகும்
வாழ்வுடைச் சிறியேன் நானும்
மனம்விழைந் தனன்காண் டற்கே.

விரும்பிய வாறே அன்னான்
வீட்டினிற் கொருநாட் சென்றே
அரும்பணி அனைத்தும் செய்தே
அமைதியாய் இருந்தோன் தன்னைப்
"பெருங்குணக் குன்றே இந்தப்
பேதையான் நின்னைக் காண
ஒருங்குளந் தூண்ட வந்தேன்
உவந்தனன்! உவந்தேன்" என்றேன்.

## வேறு.

என்னுரை கேட்டே அமைதியாய்ப் "புதல்வ
இருக்கவென்" றுரைத்தலும் யானும்
முன்னரோர் இருக்கை தன்னிலே அமர்ந்தே
முற்றிய அறிவினோன் தன்னை
மன்னுபே ராவல் தூண்டவே அனைத்தும்
மறந்தனன் ஆகியே நோக்கி
"நின்னையான் கண்ட பேற்றினால் துயரம்
நெஞ்சினில் துறந்தனன் பெரியோய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீதிலா நெஞ்சப் பண்புளோர் முகத்தே
திகழுமோர் ஒளியெனப் பெரியோர்
ஓதினுர் யானும் உணர்ந்தனன் நின்தன்
ஒண்மைசேர் முகத்திலே நல்ல
மாதரார் தமக்கும் இளகிடா நெஞ்சும்
பார்த்ததும் பார்த்திடும் அந்தப்
போதிலே உருகும் வண்ணமே செய்யும்
பொலிவுசார்ந் திருத்தல் கண்டனனே

நெஞ்சமோ நிலையின் நீங்கியே தீய
நினைவினில் மூழ்கவே சிறியேன்
அஞ்சியே நின்தன் மொழியினைக் கேட்டே
அதன்வழி நடக்கவே விழைந்து
வெஞ்சிலை விடுத்த கணையென விரைந்தேன்
வினையெனும் ஆற்றலோ டென்னை
நஞ்சினும் கொடிதாய் வருத்துமென் மனக்கு
நல்லன உரைத்திநீ" யென்றேன்.

"இற்றைநாள் உள்ள இளைஞருட் பலரும்
இன்னறம் தனைமறந் தனராய்க்
கற்பதும் செவியாற் கேட்பதும் எல்லாம்
காணுமோர் தேர்வினிற் கென்றே
பிற்றைநாள் உலகு தாமென மறந்தே
பிழைபல புரிந்திடுங் காலை
நற்பெரு வாழ்வு வாழுமோர் நெறியை
நவில்கென நீயெனைக் கேட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னையே போல இளைஞர் எல்லோரும்
ஓங்கிய அறத்தினை விழைந்தால்
என்னையொத் தோர்கள் இனியன அவர்க்கே
இயம்பவும் மறுப்பரோ குழந்தாய்!
மன்னுவல் வினையால் இளைஞர்தீ நெறியில்
வாழ்வினில் விரைவது கண்டே
என்னதான் இப்போக் கெய்துமோ? வென்றே
ஏங்குமே எம்முடை நெஞ்சம்.

நெருநலுள் ளவனின் றில்லையா மென்னும்
நீர்மைத்தா கியவுல கிதனில்
பெருகுமா சையின்பாற் பட்டவர்க் கென்றும்
பெருகுமே துன்பமாம் அதனால்
வருவதே தெனினும் வருகவென் றெண்ணி
வருபயன் ஆய்ந்திடா தினிய
கருமமே புரிக! பயனைநோக் காதோர்
கவலையும் காண்பரோ! புவிமேல்.

உறுப்பெலாம் செயலற் றொடுங்கியே ஆவி
உடலினிற் பிரிந்திடுங் காலிப்
பிறப்பிலே தெரிந்து புரிந்தபல் செயலும்
பிழையற நினைந்துபார்க் கையிலே
பிறர்க்கியான் தீமை புரிந்திலேன் என்னும்
பெருமையும் அமைதியும் கொள்ளும்
அறப்பெரு வாழ்வு வாழ நீ முயல்தல்
அன்பகேள்! கடனதே யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிலா நீதி நூல்பல ஓர்ந்தும்
ஏதமில் அறிஞரைச் சார்ந்தும்
மண்ணிலே யாக்கை நிலைத்திடா தென்னும்
மறுவிலா உண்மையை நினைந்தும்
எண்ணிடா தின்னல் புரிந்துபொய் யின்பம்
ஏற்பவர் தம்மை எய்தாதே
உண்ணவொன் றின்றி யிறப்பினும் அறத்தை
ஓம்புவோர்ச் சார்கநீ யென்றான்.

"ஐயநின் மொழிகேட் டளப்பிலா மகிழ்ச்சி
அடைந்தனன் அதன்வழி நடப்ப
மெய்யிலே முயல்வேன் வேறுமொன் றுன்னை
வினவிட விழைந்தனன் நீயோ
பொய்யிலா மனத்தோ யாயினும் கண்கள்
போயதெவ் வாறென உரைத்தி!
ஐயநான் வினவல் அறமிலை யெனினும்
அன்பினால் பொறுத்தி யென் றுரைத்தேன்!

"குற்றமொன் றில்லைக் கேட்டதில் யானும்
கூறுவேன் இதுவரை யார்க்கும்
சொற்றிலேன் எனினும் நின்னையொத்தோர்க்குச்
சொல்வதால் நன்மையே உண்டாம்
சற்றுநீ அமைதி யாயிரு யாவும்
சாற்றுவேன்" என்றதன் பின்னர்ப்
பற்றிலா நெஞ்சப் பண்பினோன் சரிதம்
பகர்ந்திடத் தொடங்கினான் மாதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு.

எண்ணிறந்த பயனளிக்கும் குன்றும் மற்றும்
எழில்நிறைந்து பயனளிக்கும் இனிய காடும்
மண்ணனைத்தும் உயிருடனே வாழ்வ தற்கு
வகைசெயும்நல் வயல்களொடும் தகுதி யாலே
கண்ணணையிழுத் திடும்மணியும் தருவ தான
கடற்சிறப்பும் உடையதுவாய் இலங்கு கின்ற
எண்ணரிய நலம்படைத்த இந்த நாடே
எனையீன்ற இயற்கைவளம் நிறைந்த நாடாம்

இவ்வுயர்ந்த நாட்டினிலே கண்டி என்னும்
இரும்பதியில் நான்பிறந்தே துன்ப மென்ப
தெவ்விதமென் றறியாதே நண்ப ரோடும்
இன்கிள்ளைக் கூட்டமென மகிழ்ந்தே மாதர்
கொவ்வையிதழ் விழைந்திடுமோர் பருவம் எய்திக்
குறைவின்றி நானிருக்கும் போதவ் வூரில்
எவ்விதமோ தொற்றுநோய் புகுந்த தாலே
எண்ணற்றோர் நோய்க்காளாய் இடருற் றாரே

தொற்றுமந்த வன்னோயைத் தடுப்ப தற்கும்
சுகவாழ்வின் இயல்புதனை உணர்த்து தற்கும்
கற்றறிந்த ஆண்களொடு பெண்கள் தாமும்
கடனியற்ற முன்வந்தார் நானு மந்தத் (சேர்ந்தே
தொற்றுவன்னோய்த் தடைத்தொண்டர் குழுவிற்
தொண்டுபுரிந் தேன்அந்தக் குழுவில் நின்ற
பொற்றொடியாள் ஒருத்தியிடம் என்றன் நெஞ்சம்
போயதுபின் திரும்புதற்கு விரும்பி டாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தைவளர்த் திடச்சிலரும் தமிழுக் கேநல்
லாக்கமளித் திடச்சிலரும் இசையின் மேன்மைத்
திறத்தைவிளக் கிடச்சிலரும் தமிழ்க்கூத் தின்நற்
சீரைவிளக் கிடச்சிலரும் அன்பு வாழ்வின்
மறத்தைவிளக் கிடச்சிலரும் அறத்தின் நீங்கா
மாண்பைவிளக் கிடச்சிலரும் இவ்வை யத்தே
பிறத்தலினைப் போன்றவளும் முழுமை வாய்ந்த
பேரழகை விளக்குதற்கே பிறந்தாள் போலும்

பிறர்க்கியன்ற வரையினிலே உதவும் பண்பு
பிறந்ததுகாண் என்னுடனே அஃதே போற்றுன்
பிறர்க்குதவும் செயலினிலே இன்பம் காணும்
பெற்றியவட் கிருந்ததுவே அதனுல் யாமே
அறப்பணியை இயற்றுவதில் அனைவர்க் குள்ளும்
அதிகமாய்ப் பழகுமொரு வாய்ப்பைப் பெற்றோம்
முறைப்படியாம் தொண்டுசெயக் கண்ட வூரார்
முழுமனத்தோ டெமைமகிழ்ந்து வாழ்த்தி னரே

பற்றுடனே தொண்டர்குழு முயன்று செய்த
பணியாலே தொற்றும்நோய் நீங்கிப் போக
நற்பணியைப் பாராட்டி ஊரார் எல்லாம்
நல்விருந்தங் கெமக்களித்தார் விருந்தின் பின்னர்த்
தொற்றியநோய் தடைசெய்த தொண்டர் எல்லாம்
தொடங்கினரே பயணத்தைத் தத்த மூர்க்குப்
பொற்றொடியும் புறப்பட்டாள் "நமது நட்புப்
புவியிடையே வளர்ந்திடுதல் வேண்டும்" என்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமென அவள்நடப்ப வளேசு மந்தும்
அதுபற்றி வருந்தாவாய்க் கையி ரண்டும்
இன்னலெதும் இடைக்குவரு மோவென் றஞ்சி
இருபுறத்தும் காவலர்போல் அசையு மாண்பும்
புன்னகைசெய் திடுங்காலே முகத்திற் தோன்றும்
புத்தழகும் செங்கதிர்க்குக் கூசும் கண்ணும்
அன்னவள்போ யினள்எனினும் அகத்தின் கண்ணே
அழியாத ஓவியமாய் நிலேத்த வாலோ.

ஊராரின் நோய்நீக்கப் போன என்னே
உண்டதுகாண் காதலெனும் வெய்ய நோய்அத்
தீராத நோய்நீக்க மருத்து வர்க்கும்
திறனில்லேப் போற்றெருடிக்கே உண்டா மென்று
பாரோதும் திருக்குறளும் கூறக் கேட்டே
பாவைக்கென் கருத்தனேத்தும் ஓலே மூலம்
சீராகத் தெரிவிக்க எண்ணி நானும்
சிந்தனேயை எழுத்தாக்க முயற்சி செய்தேன்

## வேறு.

நெய்யில்லாக் காரணத்தால்
நேரம் ஒருவிதமாய்ச்
செய்ய சிறுவிளக்குச்
சீரழிந்தே மங்குதல்போல்
தங்கையே நின்சேர்க்கை
நான்காணுக் காரணத்தால்
இங்கென் சிறுவாழ்வும்
என்றென்றும் தேய்வதினே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டில் எழுதத்
துணிந்தே எழுதுகிறேன்
ஏட்டில் வெறுமெழுத்தென்
றெண்ணுதே இத்துணையும்
வாட்டும் பெருநினைப்பால்
வாடியஎன் னுள்ளமதைக்
காட்டத் தமிழ்ச்சொற்கள்
காணும் முயற்சியடி
பொன்னின் னிறமும்
புதுமைத் தமிழ்ச்சுவையும்
உன்னை விரும்பி
உடனே பொருந்தியதால்
குன்ரு அழகுதனைக்
கோதறியா நற்குணத்தை
என்றும் விழைந்தலையும்
ஏழை யுளமுமுனை
நாடி அடைக்கலமாய்
நன்கிருக்க வேண்டுவதைக்
கோடி முறைவிழியாற்
கூறினேன் நின்கருத்தை
நன்குரைக்க எண்ணுதே
நங்காய்! நடந்துவிட்டாய்
என்கருத்தை ஏற்கா
இதயம் படைத்தனையோ?
ஏது மறியேன்
எழிலணங்கே உன்னையொரு
போதும் மறவாப்
புதுவாழ்வு பெற்றுவிட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மணந்தால்
        மணப்பேன் உனைமறந்து
பின்னை யொருத்தியையான்
        எண்ணேன் பிறப்பிலெலாம்
இவ்விதம்என் எண்ணத்தை
        ஏட்டில் எழுதியந்தக்
கொவ்வை யிதழியிடம்
        கொண்டுசென்றே சேர்க்கவென
நண்பன் ஒருவனிடம்
        நான்கொடுத்தேன் நண்பனுமே
பண்பு தவருமற்
        பாவையிடம் சேர்த்தலுமே
முற்றும் படித்து
        முடித்தபின்னர்த் தன்னுள்ளே
சற்றேதோ சிந்தித்துத்
        தன்கருத்தைக் கூருமல்
நேரில் வருகவென
        நீயவர்க்குச் சொல்லுகென
நேரிழையாள் நண்பனிடம்
        நெஞ்சை ஒளித்துரைக்கக்
'கொம்பின் உரையி'தெனக்
        கூறினுன் நண்பன்நான்
அம்பில் விரைந்தேன் அவண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு.

மண்ணகத்தே உடலிருப்ப நெஞ்சந் தன்னை
வானகத்தே விடுத்தவள்போல் எதையோ ஊன்றி
எண்ணியவா றவளிருந்தாள் எனைத்தான் எண்ணி
இருக்கின்றுள் எனநினைத்தே அவளின் பக்கம்
நண்ணியொரு நகைபுரிந்தேன் கண்டாள் இல்லை
நங்கையவள் இருந்தநிலை சிற்ப வல்லோன்
பண்ணியநற் சிற்பம்போல் இருத்தல் கண்டே
பருகினேன் அழகுதனை விழிவாய் நானே!

## வேறு.

சீரெலாம் நிறைந்த தீந்தமிழ்ப் பாடல்
செவிவழிச் செய்யுமோர் இன்பம்
காரெலாம் திரண்ட கூந்தலாய் நின்றன்
கயல்விழித் துடிப்பிலே கண்டேன்
பாரெலாம் ஒருங்கே எதிர்ப்பினும் நெஞ்சம்
பற்றெலாம் துறப்பினும் என்றும்
நேரிழாய் நின்னை மறக்கிலே னென்றென்
நினைவினை அவட்கெடுத் துரைத்தேன்

தூயபா லனைய நெஞ்சினேன் உள்ளத்
துடிப்பெலாம் சொல்லினுல் விளக்க
வேயெலாம் நாணும் தோளினுள் தானும்
விழியினுல் நீர்விடுத் தனளாய்
'நேயமே வடிவாய் நிற்குநும் முள்ள
நினைவெலாம் உணர்ந்தனன் உங்கள்
தாயநெஞ் சதனை வாழ்த்தினேன்! எனினும்
சொல்லுவேன் மற்றுமொன் றென்றுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்க் குதவும் பண்பெலாம் நும்பால்
மலிந்தமை கண்டவென் னுள்ளம்
அற்றைநாள் தொடங்கி உடன்பிறப் பெனவே
ஆவலோ டெண்ணிய தியாஞே
பற்றெலாம் ஒருவர் தமக்களித் தவரைப்
பல்கிடும் பிறப்பினில் எல்லாம்
சற்றுமே பிரியேன் என்றுளச் சொற்கள்
சாற்றினேன்' என்றவ ளுரைத்தாள்

பற்றெலாம் கவர்ந்த தனிச்சிறு மகனைப்
பாய்புலி கவர்ந்திடத் துடித்த
பெற்றவள் போலும் கற்பினை இழந்த
பெருங்குடி மகளினைப் போலும்
உற்றபே ரிடரால் உளமிகத் துடிப்ப
உடலெலாம் ஆற்றலை இழப்பச்
சொற்களை ன்ஞுவில் வரமறுத் திடவும்
சொல்லினேன் முயற்சியாற் சிலவே.

ஆவலால் சிறிதும் ஆய்ந்திடா தொருவன்
அரும்பொருள் தன்னையான் விழைந்தேன்
பாவியேன் இனியிங் கிருப்பதும் முறையோ?
பண்பெலாம் கொன்றனன் அந்தோ
சாவிலும் பிறர்க்கு நன்மையே செய்யும்
சால்புளோர் வாழும் இம்மண்ணில்
ஆய்விலா துளத்தின் வழிச்செல்வோன் வாழ்தல்
அறத்தினைக் கொலும் செயல் அன்ரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றியான் கூறித் துடித்தமை கண்டே
ஏந்திழை மிகத்துயர் கொண்டே
ஒன்றும்நீர் தீங்கு செய்திலீர் வீணே
உளம்மிக வருந்துதல் வேண்டா
அன்றுநீர் என்னை மற்றவன் பொருளென்
றறிந்திடாத் தன்மையால் அன்றோ
பொன்றிடா ஆவல் தன்னையே கொண்டீர்
புவியில்என் நிலையைஓர்ந் ததுவும்

நெஞ்செலாம் நொந்தீர் இச்செயல் அன்றோ
நேர்மையின் அணியதாய் ஆகும்
வஞ்சமே இல்லா அன்பியான் கொண்டேன்
வாழ்வெலாம் உமக்கியான் தங்கை
எஞ்சலார் எதுவும் உரைப்பரென் றெண்ணி
இவ்விடம் வருதல் நீக்காதீர்
அஞ்சிடா தென்றும் வருகநீர் வருதல்
அறத்தினிற் கொவ்வுமே யென்றாள்

உன்னையே என்றன் வாழ்வென நினைந்தே
உலகினில் வாழ்ந்தனன் அதனால்
இன்னும்என் ஆவி நிலையினிற் சிலநாள்
இருக்குமோ இல்லையோ அறியேன்
மன்னுவல் வினையால் உலகில்யா னிருப்பின்
வருகுவேன் இனியெனக் கென்றும்
துன்பமும் நோயும் அன்றிவே றெந்தத்
துணையுமே உலகினில் உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குவாழ் வதனைத் தருவதும் துயரால்
இடைவிடா தியான்வருந் திடினும்
மனக்குநல் லனவே மொழிவதும் அன்பாம்
மருந்தினுல் உயிரை ஓம்புவதும்
தனித்துணை யாக இருப்பதும் என்று
தரையினில் நீண்டபன் னுட்கள்
நினைத்ததாம் பொருளை இழந்தனன் ஆவி
நிலைக்குமேல் வருகுவேன் என்றேன்.

எண்ணினுல் மண்ணில் இன்னலே அன்றி
ஏந்திழாய் இன்பமொன் றில்லை
உண்மையாம் இன்பம் பற்றெலாம் துறந்தோர்
உறுவரே என்னையொத் தோர்கள்
நண்ணுமோர் இன்பம் சிறிதுமே இல்லை
நலனெலாம் இழந்தவென் வாழ்வு
உண்ணுநீர் அற்ருேர் உயிரென மெல்ல
ஒழிந்திடும் உண்மையே என்றேன்.

ஒருதுயர்க் காக உலகையே துறக்கும்
உள்ளமும் நல்லதோ அண்ணு
பெருமையும் உரனும் ஆடூஉவின் மேன
என்றிடும் பெருந்தமிழ் நூலின்
பொருளினை ஓர்ந்தும் துயரினுக் கஞ்சும்
புன்மைமேற் கொண்டதும் ஏனே?
வருவதே வருமென் றுரியநற் கடனை
வாழ்வினில் கொள்வதே மேலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தனக்கென வாழ்வு பயன்படா விடினும்
தக்கவர்க் கென்று வாழாது
மனக்குறும் துயரைத் தவிர்த்திட இறக்கும்
வாழ்வுமோ தன்னல வாழ்வாம்
எனக்கென வாழ்க! என்பொருட் டாய்நீர்
இறப்பது காண்பனே ஆயின்
எனக்குமோ வாழ்வே இல்லையாம்' என்றே
இருவிழி நீர்விடுத் துரைத்தாள்

''எண்ணியே யாரும் உலக மீதினிலே
இதுவரை பிறந்திலர் அதனுல்
எண்ணிய வாறே இறப்பவும் யார்க்கும்
எட்டுணை உரிமையும் இலையாம்
புண்ணியம் யாது பாவமும் யாது
புவியிடைக் கொள்வதும் யாதென்
றெண்ணியே நன்றைப் புரிந்துறு பயனை
ஏற்பதே மேலென உரைத்தாள்

'எனக்கென இந்த வாழ்வினிற் கணமும்
இருப்பதே இல்லைநான் வாழ்தல்
உனக்கென வென்றே முடிவுசெய் தனன்யான்
உலகினில் இக்கணம் முதலாத்
தனிப்புது வாழ்வு கொண்டனன்' என்று
சாற்றியே அவட்பிரிந் தனனுப்
எனக்குறு துணையாய்த் துன்பமே தொடர
இல்லெனும் சிறையடைந் தனனுல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு.

பொங்கியிடர் செயும்துயரில் அமைதி காணப்
புகழ்படைத்த தமிழ்மங்கை உதவிசெய்தாள்
திங்கள்சில சென்றதன்பின் ஓலை ஒன்றைச்
சேர்த்தனனே ஓர்இளைஞன் அதிலே அந்த
மங்கையின்கை யெழுத்திருப்பக் கண்ட நானும்
மகிழ்ச்சியுடனே விரும்பிப் படித்தேன் அஃதில்
'உங்களது நலமறிய விரும்பு கின்றேன்
உரைக்கின்றேன் எனதுநலம் இன்னும் ஒன்றே!

என்னுள்ளம் ஒருவருக்கே உரிய தென்றே
இயம்பினன்யான் முன்னேயே வரும்நன் னாளில்
அன்னாரும் நானும்மே உயர்ந்த தாமில்
லறவாழ்வை மேற்கொள்ளப் போகின் றோம்நீர்
இன்னுரையால் எமைவாழ்த்தி யேக வேண்டும்!
இதுவுங்கள் தங்கையது விருப்பம் என்றே
நங்கையவள் எழுதியமை கண்ட நானும்
நறுமணத்திற் கேகிடவே முடிவு செய்தேன்.

இங்கெனக்கென் றாசையோ எதுவும் இல்லை
ஏந்திழையின் நல்வாழ்வே என்வாழ் வென்று
மங்கையவள் விருப்பத்தை அவண்நான் சென்று
மறவாது நிறைவேற்றல் விழைந்தேன் ஆகி
அங்குசென்றேன் எல்லொரும் ஓசை யின்றி
அழுதவண்ணம் இருந்தார்கள் அவளின் வாழ்வில்
பங்குகொண்டோன் வருந்தியவா றிருத்தல் கண்டே
பகர்துயர்க் காரணத்தை என்றே கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புடையோய் எதிர்பாரா வண்ணம் நேற்றுப்
பற்றியதாம் வெம்நெருப்பால் உயிரே போல்வாள்
கண்களினை இழந்துவிட்டாள் மற்றென் சொல்வேன்
கலங்குகிறேம் என்றுரைத்தான் அந்தோ! அந்தோ!
மண்ணிடையான் துயருற்றேன் எனினும் அன்னுள்
மகிழ்ந்திருப்பின் எனக்கின்பம் ஆகும் என்றே
எண்ணினன்யான் அப்பேறும் இழந்திட் டேனே!
எனத்துடித்தேன்! செயலறியா தேங்கி னேனே!

வருத்தமெனும் கடலடியில் கிடந்த என்னை
வந்தொருகை தீண்டியது யாரோ என்றேன்
"மருத்துவன்நான் உன்னுடைய நண்பன் என்னை
மறந்தனையோ எனநண்பன் கேட்க இப்போ
திருக்குநிலை தனில்யாரும் நினைவில் இல்லை
ஏற்றமுறு மருத்துவன்நீ தானே யாகில்
இருப்பவர்யா வரும்மகிழத் தீயாற் கெட்ட
இருவிழியும் குணப்படுத்து வாயோ" என்றேன்

என்னுடைய ஆவலினை உணர்ந்த நண்பன்
"ஏந்திழையிவ் வையகத்தைப் பார்த்தல் வேண்டின்
இன்னொருவர் தம்விழியை ஈதல் வேண்டும்
இச்செயற்கிங் குடன்படுவோர் யாரு மில்லை
பொன்னனைத்தும் கொடுப்போரும் உள்ளார் கண்கள்
புவியிடையே பிறர்க்களிக்கும் பண்புள் ளோர்கள்
இன்னுமுதித் திடவில்லைத் தியாக நெஞ்சம்
இலையெனினும் அதுகுற்றம் இல்லை"என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவனைத் தனியிடத்திற் கழைத்துச் சென்றே
மாண்புடையோய்! நீஎன்றன் நண்பன் என்றன்
வருத்தத்தில் பெரும்பங்கு நினக்குண் டென்றேன்
மறுப்பென்ன நீமுன்னர் உதவாவிட்டால்
இருப்பேனே இந்நிலையில் உனக்காய் என்னால்
இயன்றதெல்லாம் செய்திடுவேன் அதனை இன்னே
உரைத்திஎனச் சொன்னனே நானும் என்றன்
உளத்திருந்த அனைத்தையுமே உரைக்க லானேன்

இன்றுவிழி தனைஇழந்தா ளிடத்தி லேதான்
இருக்கின்ற தென்னுவி அவள்நோக் கண்டே
குன்றுகிற தென்வாழ்வு அவளின் துன்பம்
குறையாது போமாகில் என்றன் ஆவி
சென்றுவிடும் இஃதுடலில் நிலைத்தல் வேண்டின்
சேயிழையாள் விழியுடன் தான் விழைந்த வாறே
மன்றல்புரிந் திடல்வேண்டும் இதற்கே உன்றன்
மருத்துவத்தின் ஆற்றலெலாம் உதவல் வேண்டும்

மண்ணிடையே அவளுக்காய் உயிரும் ஈய
மனந்துணிந்தேன் ஆதலினல் என்றன் நல்ல
கண்ணிரண்டும் அவளுக்குக் கொடுப்பேன் பாரைக்
காணுமொரு நிலையினிலே அவளை வைத்தி!
எண்ணரிய பிறவிகள்தான் எடுத்திட் டாலும்
இவ்வுதவி புரியினுனை மறவேன் என்றேன்
எண்ணமற் கூறுகின்றாய் கண்ணின் மாண்பை
இன்னும்நீ உணரவில்லைப் போலு'' மென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

திங்களினைக் குன்றதனைச் சீர்படைத்த
கடலதனைத் திருவாய்ந் திட்ட
செங்கதிரை மின்னலினை விண்மீனைத்
தெரிவித்தே இயற்கை என்னும்
மங்கையவள் உரைக்கின்ற உண்மைகளை
அறங்களினை வாழ்விற் பற்ற
இங்கெனக்கு நல்லுதவி இயற்றியவை
என்னரிய இருகண் ணன்றோ!

பல்கியதீந் தமிழ்நூல்கள் ஓய்வின்றிப்
படிப்பதற்கும் பாடோர்ந் திட்ட
நல்லவரைக் காண்பதற்கும் வாடியோர்க்
கினியசெயல் நான்செய் தற்கும்
ஒல்லுகின்ற வகையிலெலாம் உதவியவிக்
கண்மிகவும் உயர்ந்த வேனும்
மெல்லியட்கே இன்றுதவக் கண்ணன்றி
ஆயுங்கால் வேறென் றில்லை

## வேறு

எனக்கென்றே வாழ்வில்லை என்று நானும்
எண்ணற்ற முறைஉரைத்தேன் நண்ப நீஎன்
மனக்கினிய செய்வதெனில் என்சொற் கேட்டி
மறுப்பதெனில் கொடும்நஞ்சைத் தருதி என்றேன்
"உனக்குரைத்துப் பயனில்லை உன்றன் எண்ணம்
உனக்கெடுப்ப தாயின்நான் என்ன செய்வேன்?
எனக்கென்ன இதுகடனென் றுற்று கின்றேன்"
எனஉரைத்தே இருகண்ணில் நீர்சொ ரிந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய கண்ணென்றல் அந்த மங்கை
ஏற்பதற்கு மறுத்திடுவாள் கொலைத்தண் டத்தால்
தன்னுயிரை விடுமுன்னர் ஒருவன் மற்ரேர்
தமக்காகத் தன்கண்ணைக் கொடுக்க வென்றே
இன்னுரைசெய் திறந்தனனென் றவட்கு ரைத்தே
என்னுடைய கண்களினை அவட்கே வைத்தி
பின்னிவண்நான் வாழாதே இவ்வூர் விட்டே
பிறவூர்க்குச் செல்கின்றேன் என்றே சொன்னேன்

எண்ணியவா றனைத்துமே நடந்த மங்கைக்
கிருவிழியும் உதவினேன் மங்கை தானும்
எண்ணியவன் தனைமணந்தே இன்ப மாக
இருக்கின்றுள் எனஅறிந்தேன் அவ்வூ ரார்தம்
கண்களுக்குத் தெரியாதே அற்றை நாளே
கருத்துவப்ப இவ்வூர்க்கு வந்து நானும்
மண்ணகத்தே இயன்றவரை பிறர்க்கு நன்மை
வழங்கியவா றிருக்கின்றேன் என்றே சொன்னுள்

காதலென் றொருநாட் கொருத்தியை நாடும்
கயவர்கள் வாழ்ந்திடும் நாளில்
காதல்யா தெனவே காட்டினை உன்தன்
கண்ணையும் அவட்கென அளித்தாய்
தீதெலாம் ஒருங்கே சேரினும் நெஞ்சைத்
திருடியோர் வாழ்ந்திடல் வேண்டிச்
சாதலும் புரியுந் தன்மையோர் தாமே
தரையினில் காதலர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலா யாக்கை தன்னெழில் கண்டே
நினைப்பதும் எழில்மறைந் ததுவும்
விலையிலாப் பண்டம் எனவிடுப் பதுமே
மேவியின் ஞளிடைப் பலரும்
அலைவுறும் காலை அறம்சொலும் காதல்
அறிகவென் றுணர்த்திய பண்பாம்
மலையெனத் திகழும் மாண்புளோய் உலகோர்
மனத்தெலாம் உள்ளனை நீயே.

உன்னையான் கண்ட முதலென துள்ளம்
உயர்நெறிச் செல்லவும் அதற்காய்
இன்னலெத் தனைதான் வரினுமேற் றிடவும்
எண்ணிய தாதலாற் சிறியேன்
இன்னுமெத் துணைதான் பிறப்பெடுத் திடினும்
இட்டியும் அறம்வில காதே
மன்னுநல் வாழ்வு வாழ்ந்திட உரைநீ
வழங்குக என்றியான் இரந்தேன்.

உனக்கென எதைத்தான் உரைக்குவேன் யார்க்கும்
உரைப்பதே உனக்குமிங் குரைப்பேன்
வினைப்பயன் வசத்தால் நன்றதும் தீதும்
விளைந்திடும் யார்க்குமே அதற்காய்த்
தினைத்துணை தானும் தீங்குநீ என்றும்
செய்திடல் நினைக்கவும் வேண்டா
மனத்தினைக் கொல்லும் இன்னலை ஏற்றும்
மற்றவர்க் கின்பமே செய்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவன் உரைப்ப ஐயநின் னெறியில்
என்றனைச் செலுத்துவேன் மற்றும்
இன்றுநின் காட்சி கண்டதும் புதிய
இன்பிறப் பெடுத்தனன் இனியான்
நன்றினை வளர்க்க உயிரையும் ஈயும்
நல்லதோர் உறுதியும் பூண்டேன்
சென்றிட விடைதா என்றனன் அன்னான்
செல்கெனச் சென்றனன் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோற்றல் என்றதும் இருவருடைய நினைவு எழுகின்றது. "எனக்கு அரசு வேண்டும். அதற்கு அம்பு ஒன்று வேண்டும்". இது காண்டீபனின் நோன்பு. "என் ஒரு கண்ணான்று இரு கண்ணும் போனாலும் உன் கண் நோய் தீரட்டும்." இது கண்ணப்பனின் நோன்பு. "என் நிலபுலன் செல்வம் எல்லாம் போனாலும் தமிழ் வளர்க்க வேண்டும். சைவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்." இது மட்டுவில் ம. க. வேற்பிள்ளையின் நோன்பு. இதற்காக இவர் தம் வாழ்நாளில் பெரும் பகுதியைச் சிதம்பரத்திலே கழித்தார். இப் பெரியாரின் அருமைப் புதல்வர் பண்டிதர் வே. மகாலிங்கசிவம். வெறுங் காலுடன் சட்டையின்றிச் சால்வை போர்த்த வெறும் மேலுடன் "தண்ணார் தமிழ் வளர்த்தவர்" இப் பெரும் புலவர். இவரின் அருமை மகன் புலவர் ம. பார்வதிநாதசிவம். புலமை இவருடைய முதுசொம். இதுபோதாதென்று தில்லையின் எல்லையிலுள்ள அண்ணாமலைச் செழுங்கலை நிலையத்தில் முறைப்படி தமிழ் பயின்றவர். புலவர் பார்வதிநாதசிவம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அடிப்படைக் கல்வி பெறுங்காலையில் இவரின் கணிதப் பயிற்சிப் புத்தகங்களில் ஆங்காங்கே கவிதைகள் ஊற்றெடுத்தன. இளமையில் இயல்பாகவே தோன்றிய இந்தக் கவிதை அருவியே இவரிடம் இப்பொழுது குதித்தோடுகின்றது. அதன் விளைவே இந்த நூலின் தோற்றம்; இவருடைய பாடல்களில் கற்பனை வளமும் கருத்தாழமும் நிறைந்திருப்பதைக் காணலாம். இவருடைய கவிதைகள் பல, வார வெளியீடுகளில் இடம்பெற்று "நறுக்குகளாக" உறங்கிக்கொண்டிருக்கின்றன. வேறுபல அச்சுவாகனம் ஏறாமல் இருக்கின்றன.

இப்பொழுது வெளிவரும் இந்தச் செய்யுள் தொகுதிமூலம் இந்த இளம் புலவர் தம் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தையும் தமிழ்கூறும் நல்லுலகில் ஒரு பொலிவையும் ஏற்படுத்துவாராக.

— த. சண்முகசுந்தரம்
B.A. (CEY.) Dip.-in-Ed (CEY.)

அட்டை, சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org